ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

**23 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் (×) இடுவதன் மூலம் காட்டுக.

※ ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

● **1** முதல் **15** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**1.** அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்தும் கற்கைகளாவன:
A – அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய கற்கை
B – அரசியல் அதிகாரம் பற்றிய கற்கை
C – மக்களின் அரசியல் நடத்தை பற்றிய கற்கை
D – மக்கள், அரசாங்கம் மற்றும் அரசுக்கிடையிலான தொடர்பு பற்றிய கற்கை
E – உலகியல் வாழ்க்கையிலிருந்து மக்களை மீட்டெடுத்தல் பற்றிய கற்கை
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**2.** அரசியலானது:
A – அதிகாரப் போராட்டத்தின் நடைமுறை வெளிப்பாடாகும்.
B – அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக மோதும் நலன்களின் பெறுபேறாகும்.
C – தனிப்பட்டவர்கள், அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் ஒரு விளையாட்டாகும்.
D – கனவான்களின் ஒரு விளையாட்டாகவும் கருதப்படுகிறது.
E – யார், எதனை, எப்போது, எவ்வாறு பெற்றுக்கொள்வர் என்பதைத் தீர்மானிக்கும் ஒரு விளையாட்டாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**3.** நடத்தைவாதமானது:
A – அவதானிக்கத்தக்க மனித நடத்தையை மட்டும் தளமாகக் கொண்டு சமூகக் கோட்பாடுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற நம்பிக்கையின் படி நிறுவப்பட்டுள்ளது.
B – அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பெறுமானஞ்சார் விடயங்களைக் கற்பதற்கு அதிக கரிசனை காட்டுவதனை வலியுறுத்துகிறது.
C – ஆராய்ச்சிகள் மற்றும் புள்ளிவிபரப் பகுப்பாய்வினூடாக அளவிடக்கூடிய தரவுகளின் சேகரிப்போடு சம்பந்தப்படுகிறது.
D – எதிர்வுகூறக்கூடிய ஆற்றலையுடைய அனுபவம் சார் கோட்பாடுகளைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது.
E – உறுதிப்படுத்தக்கூடிய விளக்கரீதியான கோட்பாடுகளின் அடிப்படையில் விஞ்ஞானரீதியான அறிவை அபிவிருத்தி செய்ய முடியும் என்று வலியுறுத்துகிறது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**4.** அரசு என்பது:
A – அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த ஒரு சமூகமாகும்.
B – மக்களின் கூட்டு விருப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முகவராகும்.
C – கடவுளால் உருவாக்கப்பட்ட உயர் அரசியல் தாபனமாகும்.
D – இறைமை என்ற உயர் அதிகாரத்தின் ஏக உரித்தாளனாகும்.
E – நிலம், மக்கள், அரசாங்கம், இறைமை என்ற அடிப்படைக் கூறுகளைக் கொண்டதாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE



Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**5.** தேசிய அரசு என்பது:

A – கலாசார வேற்றுமையையும் அரசியல் ஒற்றுமையின்மையையும் பாதுகாக்கும் ஓர் அரசு முறைமை எனப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

B – குடியுரிமையினதும் தேசியத்துவத்தினதும் அரசியல் பிணைப்பின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட தன்னாட்சி அரசியல் சமூகமாக உள்ளது.

C – பல்தேசப் பேரரசுகளுக்கும் நகர அரசுகளுக்கும் எதிராக 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு மாற்று அரசு முறைமையாக உள்ளது.

D – ‘ஒவ்வொரு தேசமும் ஓர் அரசு மற்றும் முழுத் தேசத்துக்கும் ஓர் அரசு’ என்ற மூலக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

E – சர்வதேச அரசியலின் அடிப்படைக் கூறாகும் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**6.** இறைமைக் கோட்பாடு:

A – அரசின் அதிகாரத்தோடு தொடர்புபடுகிறது.

B – ஏனைய சமூகத் தாபனங்களுக்கு மேலால் அரசின் உயர்தன்மையை வலியுறுத்துகிறது.

C – அரசின் சட்டங்களுக்குச் சட்டபூர்வத்தன்மையை வழங்குகின்றது.

D – தேசிய அரசு முறையின் தோற்றத்தையும் இருப்பினையும் நியாயப்படுத்துகிறது.

E – கடவுளை அரசியலதிகாரத்தின் பிரதான மூலாதாரம் என ஏற்றுக்கொள்கிறது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**7.** அரசாங்கம் என்பது:

A – அரசின் எஜமானனாகும்.

B – அரசின் மூளையாகும்.

C – அரசின் சார்பாக இறைமை அதிகாரத்தைப் பிரயோகிக்கும் முகவராகும்.

D – அரசின் நடைமுறைக் கரமாகும்.

E – அரசையும் மக்களையும் இணைக்கும் ஊடகமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**8.** தாராள ஜனநாயக அரசாங்கமொன்றின் அடிப்படைப் பண்புகளாவன:

A – அரசாங்கம் ஓர் அரசியல் யாப்பின் அடிப்படையில் செயற்படுதல்

B – சட்ட, நிறைவேற்று, நீதித் துறைகளுக்கிடையில் அதிகாரம் வேறுபடுத்தப்பட்டிருத்தல்

C – சட்ட, நிறைவேற்றுத் துறைகளுக்கு மேலால் நீதித்துறையின் ஆதிக்கம் காணப்படுதல்

D – ஆட்சியாளர்கள் பொது மக்களுக்குப் பொறுப்புக் கூறல்

E – காலாகாலப் போட்டிகரத் தேர்தல்கள் மூலம் ஆட்சியாளர்கள் மக்களால் தெரிவுசெய்யப்படுதல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**9.** சோசலிச அரசாங்கமொன்றின் அடிப்படைப் பண்புகளாவன:

A – அரசாங்கமானது ஒரு கட்சி முறையின் அடிப்படையில் அமைந்திருத்தல்

B – ஓர் அனைத்தாண்மை ஆட்சியாக இருத்தல்

C – கம்யூனிச சமூகத்தைத் தாபிப்பதற்காகச் செயற்படுதல்

D – சமூகப் பலதன்மையை நிராகரித்தல்

E – தமது சுய விருப்பின் பேரில் அரசாங்கத்தை மாற்றுவதற்கு மக்கள் அதிகாரம் கொண்டிருத்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**10.** எதேச்சதிகார அரசாங்கத்தின் அடிப்படைப் பண்புகளாவன:

A – தெளிவான அரசியல், பொருளாதார, சமூகத் தொலைநோக்கு காணப்படாமை

B – போட்டிகர அரசியல் கட்சி முறைமையொன்று இல்லாமை

C – சகாய நியமன முறைமையினடிப்படையில் அரசாங்கம் நிலவுதல்

D – காலாகாலத் தேர்தல்கள் மூலம் ஆட்சியாளர்கள் மக்களால் தெரிவுசெய்யப்படுதல்

E – ஆட்சியாளன் சகல சட்டவாக்க, நிறைவேற்று, நீதி அதிகாரங்களைத் தனது விருப்பின்படி பிரயோகித்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**11.** ஒற்றையாட்சி அரசாங்க முறையொன்றின் பிரதான பண்புகளாவன:

A – மத்திய அரசாங்க நிறுவனங்களில் அரசியல் ஆணையதிகாரம் ஒன்றுகுவிதல்

B – அரசியல் யாப்பின் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் உள்ளூராட்சி அரசாங்க முறை நிலவுதல்

C – இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் மத்திய அரசாங்கத்தின் தனியுரிமை நிலவுதல்

D – மத்திய அரசாங்கத்தினால் மட்டும் தேசத்தின் நலன்கள் முன்வைக்கப்படுதல்

E – ஒற்றைக் குடியுரிமையும் சட்ட முறைமையும் நீதித்துறையும் சிவில் சேவையும் நிலவுதல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

12. சமஷ்டி அரசாங்க முறையொன்றின் பிரதான பண்புகளாவன:
A – ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரு மட்ட அரசாங்கங்கள் நிலவுதல்
B – மத்திக்கும் ஓரத்துக்குமிடையில் இறைமை பங்கீடு செய்யப்பட்டிருத்தல்
C – ஓர அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்துக்குக் கீழ்ப்பட்டதாக இருத்தல்
D – மத்தியினதும் ஓரங்களினதும் அதிகாரங்கள், பணிகள் மற்றும் பொறுப்புகள் அடிப்படைச் சட்டத்தின் மூலம் பங்கிடப்பட்டிருத்தல்
E – மத்திக்கும் ஓரத்துக்குமிடையில் எழும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஒரு நடுத்தீர்ப்பாளர் என்றவகையில் ஒரு சுதந்திரமான நீதித்துறை நிலவுதல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

13. மந்திரி சபை அரசாங்க முறையிலுள்ள உண்மை நிர்வாகமானது:
A – சட்டமன்றினால் அதன் பெரும்பான்மைக் கட்சியின் உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்படுகிறது.
B – அரசியல் நிர்வாகம் என்றும் அழைக்கப்படுகிறது.
C – நாம நிர்வாகத்தின் பெயரால் நிறைவேற்றுப் பணிகளை நடைமுறைப்படுத்துதல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
D – நிறைவேற்றுப் பணிகள் தொடர்பாக சட்டமன்றுக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது.
E – சட்டமன்றினால் நிறைவேற்றப்படும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவியகற்றப்பட முடியும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

14. ஜனாதிபதி அரசாங்க முறை என்பது:
A – தாராள சனநாயகத்தினை அமுல்படுத்துவதற்குள்ள பாராளுமன்ற அரசாங்க முறைக்கான ஒரு மாற்று முறையாகும்.
B – சட்டமன்றுக்குப் பொறுப்புக் கூறாத சனாதிபதி என்ற பெயரால் அழைக்கப்படும் ஒரு நிறைவேற்றுத்துறையின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது.
C – செயற்றிறன் மிக்கதாயினும் ஜனநாயகத் தன்மை குறைந்த அரசாங்க முறை எனக் கருதப்படுகிறது.
D – சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்குமிடையில் சேய்மையான தொடர்பினைக் கொண்ட ஒரு முறையாகும்.
E – 1958 இல் டி கோல் யாப்பின் மூலம் முதன்முறையாக அறிமுகம் செய்யப்பட்டது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

15. சிவில் சமூகம் என்பது:
A – அரசின் ஆணையதிகாரத்திலிருந்து மக்களின் சிவில் அதிகாரத்தை வேறுபடுத்திக் காட்டப் பயன்படுத்தப்படும் ஓர் எண்ணக்கருவாகும்.
B – சமூகத்தின் சுயாதீன குழுக்களையும் தனியார் சங்கங்களையும் கொண்டு ஒழுங்கமைந்துள்ளது.
C – அனைத்தாண்மை ஆட்சி முறைகளில் கூட பூரண செயற்பாட்டுச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றது.
D – சமூகத்தின் 'சிறிய படையணிகளின்' திரட்சி என அழைக்கப்படுகின்றது.
E – தாராள ஜனநாயகத்தின் ஓர் அத்தியாவசியப் பண்பாகக் கருதப்படுகின்றது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

- **16** முதல் **21** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று பிழையானதாகும். **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

16. தேசியவாதம் என்பது:
(1) அரசியல் ஒழுங்கமைப்பின் மைய மூலக்கொள்கையே தேசமாகும் என்ற நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட ஓர் அரசியல் கருத்தியலாகும்.
(2) நவீன உலகின் தற்போதைய நிலை உருவமைவதில் அதிகம் பாதிப்புச் செலுத்தியுள்ள மிகப் பலம்வாய்ந்த அரசியல் கருத்தியல்களுள் ஒன்றாகும்.
(3) அரசியல் தேசியவாதம், கலாசாரத் தேசியவாதம் என்ற இரு அம்சங்களைக் கொண்டுள்ளது.
(4) 'சகல தேசங்களும் சுதந்திரமான அரசத்துவத்துக்கு உரித்துடையவையாகும்' என்ற கருதுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது.
(5) மாக்சிசத்துக்கும் பாசிசத்துக்கும் நாசிசத்துக்கும் எதிராகத் தோன்றிய ஓர் அரசியல் கருத்தியலாகும்.

17. குடியுரிமை என்பது:
(1) தனிப்பட்டவருக்கும் அரசுக்குமுள்ள தொடர்பை வெளிப்படுத்தும் ஊடகமாகும்.
(2) அரசின் பூரண உறுப்புரிமை உரித்தாவதற்கான ஓர் அடிப்படை முன்தேவைப்பாடாக உள்ளது.
(3) அரசின் பூரண உறுப்பினர்கள் எனக் கருதப்படாத கீழ்ப்பட்டோருக்கும் வேற்று நாட்டவர்களுக்கும் உரித்தாவதில்லை.
(4) அரசின் இருப்புக்கு அவசியமான சில கடமைகளைப் பிரசைகள் மேற்கொள்வதைக் குறித்து நிற்கின்றது.
(5) தன்விருப்பின்படி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தற்கொலை செய்துகொள்வதற்கான உரிமையையும் சுதந்திரத்தையும் பிரசைகளுக்கு அனுமதிக்கின்றது.

18. அரசியல் கட்சிகளானவை:
(1) தேர்தல் வெற்றியின் மூலம் அரசியலதிகாரத்தை அமுலாக்குவதனை இலக்காகக் கொண்ட மக்கள் அமைப்புகளாகும்.
(2) உத்தியோகபூர்வ உறுப்புரிமை அட்டைகளைக் கொண்ட அமைப்புகளாகும்.
(3) மகாஜன மற்றும் காடர், யாப்புசார் மற்றும் புரட்சிகர, பிரதிநிதித்துவ மற்றும் ஐக்கிய கட்சிகள் எனப் பகுக்கப்படுகின்றன.
(4) தற்கால அரசியலில் மக்களை ஒழுங்குபடுத்தும் பிரதான ஊடகங்களாகும்.
(5) அரசியல் சமுதாயப்படுத்தலின் மிக முக்கிய முகவர்களுள் ஒன்றாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**19.** அமுக்கக் குழுக்கள் என்பவை:
(1) நலன்பேண் குழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.
(2) தாராள ஜனநாயகத்துக்குப் பாதகமான ஒன்று எனக் கருதப்படுகிறது.
(3) தாராள ஜனநாயக அரசியல் முறைமையில் மட்டுமே காணப்படுகின்றது.
(4) அரசாங்கத்தின் கொள்கைகளிலும் செயற்பாடுகளிலும் செல்வாக்குச் செலுத்துவதை இலக்காகக் கொண்டு ஒழுங்கமைந்த சங்கங்களாகும்.
(5) ஒரு குறிப்பிட்ட விடயத்தோடு அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் நலன்களோடு கரிசனை கொள்கிறது.

**20.** அரசியல் பிரதிநிதித்துவம் என்பது:
(1) ஒரு தனியாள் அல்லது ஒரு குழு ஒரு பரந்த மக்கள் கூட்டத்துக்குச் சார்பாக நிற்கும் அல்லது செயலாற்றும் விதத்தை வெளிப்படுத்தும் ஒரு தொடர்பாகும்.
(2) தற்காலச் சூழல்களில் தாராள ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் ஒரே ஊடகம் எனப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
(3) பிரதானமாகப் பகிரங்கத் தேர்தல்களினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
(4) ஆட்சியில் மக்கள் நேரடியாகப் பங்கேற்பதற்கு வாய்ப்பளிக்கும் ஊடகமாகும்.
(5) மக்கள் வெறுப்புக்குள்ளான அரசியல்வாதிகளையும் அரசாங்கங்களையும் அகற்றுவதற்கு மக்களுக்குள்ள ஏக ஜனநாயக வழிமுறையாகும்.

**21.** மனித உரிமைகள் என்பவை:
(1) கடவுளால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளாகும்.
(2) மனிதப் பிறவிகளாக இருப்பதனால் மக்களுக்கு உரித்தாகும் உரிமைகளாகும்.
(3) அனைத்துலக ரீதியானவை, அடிப்படையானவை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
(4) சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் நீதிக்குமான அடித்தளம் எனக் கருதப்படுகின்றது.
(5) மனிதனுக்குச் சிறந்த அரசியல், சிவில் வாழ்வினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படுபவை எனக் கருதப்படுகின்றது.

● **22** முதல் **25** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் **நான்கு** கூற்றுகள் பிழையானவையாகும். **பிழையான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**22.** குறிப்பிட்ட நாடுகளின் அரசியல் முறைமைகளின் சில சிறப்புப் பண்புகளாவன:
A – பெரிய பிரித்தானியாவில் மந்திரி சபையானது இரண்டாம் மன்றில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற கட்சியின் உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவதோடு மந்திரி சபையானது பாராளுமன்றுக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூறக் கடமைப்படுகிறது.
B – ஐக்கிய அமெரிக்காவில் 538 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வாளர் கழகத்தின் மூலம் சனாதிபதி மறைமுகமாகத் தெரிவுசெய்யப்படுவதோடு சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு மொத்த உறுப்பினர்களில் 2/3 பகுதியினரின் சம்மதத்தைப் பெற வேண்டும்.
C – இந்தியாவில் சனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக யாப்பினால் தாபிக்கப்பட்டுள்ள தேர்வாளர் கழகம் மத்திய அரசாங்கச் சட்டத்துறையினதும் சகல மாநில அரசுகளின் சட்டத்துறைகளினதும் சகல உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.
D – பிரான்சில் 1958 டி கோல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசியப் பேரவையானது தேர்தலில் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களை மட்டும் கொண்டிருப்பதோடு அதன் நான்கு வருடப் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அதனைக் கலைப்பதற்கு சனாதிபதி அதிகாரம் பெறவில்லை.
E – சுவிற்சர்லாந்தில் சமஷ்டிப் பேரவை எனப்படும் மத்திய அரசின் நிறைவேற்றுத்துறையானது சமஷ்டி மன்றினால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு சமஷ்டிப் பேரவை தனது தீர்மானங்களைக் கூட்டாக எடுப்பதற்குக் கட்டுப்பட்டுள்ளது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**23.** சர்வதேச அரசியலில் அரசுகளின் பிரதான நோக்கமாவது:
A – தேசிய மொழியையும் கலாசாரத்தையும் மேம்படுத்துவதாகும்.
B – தேசிய நலன்களை மேம்படுத்துவதாகும்.
C – ஏனைய தேசங்களுடன் நட்புறவினை மேம்படுத்துவதாகும்.
D – தேசிய கருத்தியலை மேம்படுத்துவதாகும்.
E – ஐக்கிய நாடுகள் தாபனத்துடனான உறவை மேம்படுத்துவதாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**24.** பொதுக் கொள்கை என்பது:
A – மக்களின் பொது நலனை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.
B – இலாபத்தை உயர்த்துவதற்கு ஒரு தனியார் கம்பனியால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.
C – அதன் உறுப்பினர்களின் பொது நலனை மேம்படுத்துவதற்கு ஒரு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.
D – அதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தினால் வகுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.
E – தனது தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதற்கு ஓர் அமுக்கக் குழுவினால் வகுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**25.** சமூக மோதல் குறித்து நிற்பது:
A – நிறுவனத்துக்குள்ளான மோதலை ஆகும்.
B – சமூகக் குழுக்களுக்கிடையிலான மோதலை ஆகும்.
C – தனிநபருக்குள்ளான மோதலை ஆகும்.
D – அரசியல் கட்சிக்குள்ளான மோதலை ஆகும்.
E – அரசாங்கத்துக்குள்ளான மோதலை ஆகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **26** முதல் **38** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**26.** பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் விருத்தியடைந்த சில முக்கிய அரசியல், பொருளாதாரத் துறைகளாவன:
A – மக்கள் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டதொரு ஜனநாயக ஆட்சி
B – ஒரு சுதந்திரமான ஊழியச் சந்தை
C – சுயாதீனமானதும் ஒருமையானதுமானதொரு நீதி முறைமை
D – மத்தியமயப்படுத்தப்பட்டதும் சுயாதீனமானதுமான நிர்வாக முறைமை
E – பிரிவெனாக் கல்வி
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**27.** பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ்:
A – இராஜகாரிய முறையின் ஒழிப்பின் காரணமாக சாதி முறைமை இல்லாதொழிந்தது.
B – திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் அறிமுகத்தினால் தேசியப் பொருளாதாரம் சர்வதேசச் சந்தையோடு இணைந்தது.
C – பிற்காலத்தில் தேசிய இயக்கத்துக்குத் தலைமைத்துவத்தையளித்த ஒரு சுதேச முதலாளித்துவ வர்க்கம் தோன்றியது.
D – அரசாங்கத்தினால் வளமாக்கி மானியம் வழங்கப்பட்டமையால் கிராமிய விவசாயம் அபிவிருத்தியடைந்தது.
E – கச்சேரி முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரதேச நிர்வாக முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**28.** இனவாரிப் பிரதிநிதித்துவமானது:
A – 1833 கோல்புரூக் - கமரன் சீர்திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.
B – இலங்கைச் சமூகத்தில் இனவாதம் உருவாவதற்கு அதிகம் பொறுப்பாகியது.
C – சிறுபான்மை இனக் குழுக்களால் அதிகமாக விரும்பப்பட்டது.
D – பிரதிநிதித்துவம் பற்றிய ஒரு சிறந்த மூலக்கொள்கையாக தேசிய காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
E – 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்டது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**29.** 1911 - 1924 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்களின் கீழ்:
A – நிறைவேற்றுக் குழு முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசாங்க முறைமை தாபிக்கப்பட்டது.
B – சட்டமன்றின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
C – சட்டமன்றின் உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது.
D – உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
E – வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்டது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**30.** 1924 யாப்புச் சீர்திருத்தத்தின் மூலம்:
A – தேசாதிபதியின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டது.
B – சட்டமன்றின் அமைவுச் சேர்க்கை பரவலாக்கப்பட்டது.
C – உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
D – இனவாரிப் பிரதிநிதித்துவம் மாற்றப்படவில்லை.
E – பொறுப்பிலிருந்து அதிகாரம் பிரிக்கப்பட்டதனால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்பெறவில்லை.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**31.** தேசிய இயக்கமானது:
A – மேற்கத்திய கல்வியைக் கற்ற மத்தியதர வர்க்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டது.
B – சகல சமூக அடுக்கமைவுகளையும் உள்ளடக்கிய ஒரு மகாஜன இயக்கமாகவிருந்தது.
C – யாப்புச் சீர்திருத்தங்களினூடாகப் பொறுப்பாட்சிக்காகக் கிளர்ந்தெழுந்தது.
D – விமர்சகர்களின்படி தென்னாசியாவில் அமைதியான தேசிய இயக்கங்களுள் ஒன்றாகவிருந்தது.
E – 1921 இற்குப் பின்னர் ஏற்பட்ட இனவாரியான பிளவுகளினால் பலவீனமடைந்தது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**32.** இலங்கைத் தேசிய காங்கிரஸ்:

A – 1919 டிசம்பர் 11 இல் தாபிக்கப்பட்டது.
B – கல்வி கற்ற, செல்வந்த, உயர் மத்தியதர வர்க்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டது.
C – ஒரு குடை ஒழுங்கமைப்பாக இருந்தது.
D – சுதந்திர இயக்கத்துக்காக சாதாரண மக்களைத் தயாராக்குவதில் ஊக்கம் காட்டவில்லை.
E – கரைநாட்டு, சிங்கள பௌத்த மத்தியதர வர்க்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பாக இருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**33.** நிதிக்குழு:

A – 1907 இல் தேசாதிபதி ஹென்றி மக்கலமினால் தாபிக்கப்பட்டது.
B – பிரதம செயலாளர், பிரதான வரி அதிகாரி, பொருளாளர், சகல உத்தியோகத்தர் அல்லாத உறுப்பினர்களையும் கொண்டிருந்தது.
C – சட்டமன்றம் கூடாதபோது நிதி மசோதாக்களைக் கையாளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.
D – 1912 - 1920 காலப்பகுதியில் குறூ-மக்கலம் அரசாங்கத்தின் கீழ் அலட்சியம் செய்யப்பட்டது.
E – உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற உறுப்பினர்கள் நிதி விடயங்களை சுமுகமாகக் கையாளுவதற்கு அதிகம் பயனாக அமைந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**34.** இலங்கை சமசமாஜக் கட்சி:

A – 1935 டிசம்பர் 18 இல் தாபிக்கப்பட்டது.
B – இலங்கையில் தாபிக்கப்பட்ட முதலாவது இடதுசாரிக் கட்சியும் முதலாவது அரசியல் கட்சியுமாகும்.
C – சுதந்திர இயக்கத்தை வழிநடத்துவதற்கு இலங்கைத் தேசிய காங்கிரசுடன் நெருங்கிய வகையில் இணைந்து செயற்பட்டது.
D – மேற்கத்திய கல்வி கற்ற, மாக்சியம் சார்ந்த, ஒரு மத்தியதர வர்க்க இளம் தீவிரக் குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது.
E – இலங்கையில் ஒரு சமதர்ம அரசாங்கத்தைத் தாபிப்பதனை இலக்காகக் கொண்டிருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**35.** 1931 டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சபை:

A – 61 உறுப்பினர்களைக் கொண்டிருந்ததோடு அவர்களுள் 50 உறுப்பினர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டனர்.
B – சட்டவாக்கம் மற்றும் நிறைவேற்றம் ஆகிய இரட்டை வகிபங்கு ஒப்படைக்கப்பட்ட நிறுவனமாகவிருந்தது.
C – சபாநாயகர் இல்லாதபோது தேசாதிபதியால் தலைமைதாங்கப்பட்டது.
D – வருடாந்தப் பாதீட்டை நிராகரிக்கவும் மந்திரிமார் சபையை அகற்றவும் அதிகாரம் பெற்றிருந்தது.
E – தேசாதிபதியின் தற்றுணிபின்படி எந்நேரத்திலும் கலைக்கப்படுவதற்கு உட்பட்டிருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**36.** டொனமூர் அரசாங்கத்தின் கீழிருந்த மந்திரிமார் சபை:

A – ஓர் ஒருமைத்தன்மையான சபையாகவிருந்தது.
B – பத்து உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
C – கூட்டுப் பொறுப்பின்றிச் செயற்பட்டது.
D – பிரதம செயலாளரால் தலைமைதாங்கப்பட்டது.
E – வருடாந்தப் பாதீடு மற்றும் ஏனைய நிதி மசோதாக்கள் தொடர்பாக அரசாங்க சபைக்குப் பொறுப்புக் கூறியது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**37.** 1948 சோல்பரி யாப்பு:

A – நிறைவேற்றுக்குழு முறையை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க முறையை அகற்றி மந்திரி சபை முறையை அறிமுகம் செய்தது.
B – உள்ளக விவகாரங்களில் மட்டும் சுதந்திரத்தை வழங்கியதோடு முழுமையான டொமினியன் அந்தஸ்தினை வழங்கவில்லை.
C – பிரித்தானிய மகா இராணியை இலங்கை அரசின் தலைவராகத் தொடர்ந்தும் வைத்திருந்தது.
D – நீதியமைச்சர் செனேற் சபையிலிருந்து நியமிக்கப்பட வேண்டுமென விதித்தது.
E – நீதி விடயங்களில் பிரித்தானிய கோமறைக்கழகத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு இலங்கையர்கள் பெற்றிருந்த உரிமையை இல்லாதொழித்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**38.** 1948 சோல்பரி யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்துறை:

A – இருமன்ற முறையினதாகும்.
B – பாராளுமன்றின் இறைமை என்ற மூலக்கொள்கையின்படி அமையப்பெற்றிருந்தது.
C – 29 (2) ஆம் சரத்துக்குட்பட்டு சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருந்தது.
D – தெரிவுசெய்யப்பட்டதும் நியமிக்கப்பட்டதுமான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
E – 'பாராளுமன்றம்' எனப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

● **39** முதல் **44** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் பிழையானவையாகும். **பிழையான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**39.** 1972 முதலாம் குடியரசு யாப்பு:

A – அரசாங்கத்தில் பிரித்தானிய இராணியாரின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்தும் பேணியது.
B – இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசாங்க முறையை அறிமுகம் செய்தது.
C – இலங்கையைச் சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தியது.
D – இலங்கையை ஒரு சமயச் சார்பற்ற அரசாகப் பெயர் சூட்டியது.
E – இலங்கைக்கு ஒரு புதிய தேசிய கீதத்தை அறிமுகப்படுத்தியது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**40.** 1972 முதலாம் குடியரசு யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த அரச கொள்கைக் கோட்பாடுகளானவை:

A – அரசினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சமூக, பொருளாதார, அரசியல், ஒழுக்க வழிகாட்டல்களின் தொகுதியாகும்.
B – பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் தொகுதியாகும்.
C – ஆட்சியில் அரசாங்கத்தினால் பேணப்பட வேண்டிய கடப்பாடுகளின் தொகுதியாகும்.
D – மத்திய அரசாங்கத்தினால் உள்ளூராட்சி மன்றுகளுக்குப் பிறப்பிக்கப்படும் பணிப்புரைகளின் தொகுதியாகும்.
E – நீதியை வழங்கும்போது நீதிமன்றினால் பின்பற்றப்பட வேண்டிய அளவுகோல்களின் தொகுதியாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**41.** 1978 இரண்டாம் குடியரசு யாப்பு:

A – இலங்கையில் ஜனநாயக ஆட்சியைப் பலப்படுத்துவதற்கு அதிகம் பங்காற்றியுள்ளது.
B – இலங்கை அரசின் சமயச் சார்பற்ற தன்மையை மாற்றியது.
C – சட்டத்துறையின் அதிகாரங்களையும் நிலையையும் ஆணையதிகாரத்தையும் பெரிதளவு பலப்படுத்தியது.
D – டி கோல் சனாதிபதி முறைமையை இலங்கையரசின் அடிப்படை யாப்புத்தளமாக ஆக்கியது.
E – அரசின் ஒரு பொருளாதார கொள்கை என்றவகையில் உயர்ந்தளவிலான நலன்புரிச் செயற்பாடுகளுடன் கூடிய அரச முதலாளித்துவத்தை ஏற்றது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**42.** 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ்:

A – அமெரிக்க முறைமையை ஒத்த ஒரு சனாதிபதி அரசாங்க முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.
B – சட்டவாக்கத்தில் முழு இறைமை அதிகாரம் பொருந்திய ஒரு சட்டத்துறை தாபிக்கப்பட்டது.
C – சனாதிபதியையும் மந்திரி சபையையும் கொண்ட ஒரு கலப்பு நிறைவேற்றுத்துறை உருவாக்கப்பட்டது.
D – நீதிப் புனராய்வு அதிகாரம் பொருந்திய ஓர் உயர் நீதிமன்றம் தாபிக்கப்பட்டது.
E – அரசியல் நிர்வாகத்தின் தலையீடற்ற ஓர் அரச நிர்வாக சேவை தாபிக்கப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**43.** 1978 யாப்பின் கீழ் பாராளுமன்றின் மீது ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களாவன:

A – பாராளுமன்றைக் கூட்டுதல், ஒத்திவைத்தல் மற்றும் கலைத்தல்
B – ஜனாதிபதியின் ஒரு கட்டளையின் மூலம் பாராளுமன்றின் பதவிக் காலத்தை நீடித்தல்
C – பாராளுமன்றினால் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்குச் சம்மதமளித்தல்
D – விவாதங்களில் பங்கேற்கும்போது சபைக்குத் தலைமை தாங்குதல்
E – சபாநாயகரைத் தெரிவுசெய்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**44.** 1978 யாப்பில் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் கீழ்:

A – வாழும் உரிமை தெளிவாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.
B – எந்தவொரு அடிப்படை உரிமையையும் அனுபவிப்பதன் மீது எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை.
C – அவசரகால நிலைகளில் சில அடிப்படை உரிமைகளை இடைநிறுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.
D – அடிப்படை உரிமைகள் மக்கள் இறைமையின் ஓர் அங்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
E – அடிப்படை உரிமைகள் மனுக்களைப் புனராய்வதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றுக்கு வழங்கப்படவில்லை.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

● கீழ் தரப்பட்டுள்ள கூற்றுகளின்படி **45**ஆம் **46**ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்ற மூன்று வகைகளைக் கொண்டுள்ளன.
B – 1987 இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் கீழ் தாபிக்கப்பட்டன.
C – மாகாண சபைகளின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன.
D – ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒன்று என்றவகையில் தாபிக்கப்பட்டுள்ளன.
E – மத்திய அரசாங்கம் மாகாண முதலமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கின்றது.
F – தமக்குரிய பிரதேசத்தில் சமூகப் பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்குப் பொறுப்புடையனவாகும்.
G – பிரதம நிறைவேற்றாளரான ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்.
H – நான்கு வருட காலத்துக்கு மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களை மட்டும் கொண்டுள்ளன.
I – யாப்பினால் அதிகாரம் பெற்றவையாயினும் இறைமை பொருந்திய சபைகளன்று.
J – தனக்குள்ள தற்றுணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தி மாகாண முதலமைச்சரினால் எந்நேரத்திலும் கலைக்கப்பட முடியும்.

**45.** மாகாண சபைகளுக்குப் பொருந்துகின்ற சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) ABCD (2) EFGH (3) ABIJ (4) BDGI (5) DEFG

**46.** உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குப் பொருந்துகின்ற சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) ACDE (2) BEFG (3) ACFH (4) FGHI (5) GHIJ

● ஐக்கிய நாடுகள் தாபனத்தோடும் பொதுநலவாயத்தோடும் தொடர்புபடும் சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகளின் அடிப்படையில் **47**ஆம் **48**ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – இன்றைய உலகில் பரந்த நோக்கங்களைக் கொண்ட மிகப் பெரிய அரச சார்பு நிறுவனமாகும்.
B – வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்ட ஒரு நடுத்தர அரச சார்பு நிறுவனமாகும்.
C – உறுப்புரிமை இறைமை பொருந்திய அரசுகளுக்கு மட்டும் திறந்து விடப்பட்ட ஒரு தன்னார்வ நிறுவனமாகும்.
D – உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல் பிரதான நோக்கமாகும்.
E – உலகில் ஒரு யாப்பினைக் கொண்டிராத ஒரே அரசச் சார்பு நிறுவனமாகும்.
F – உறுப்பு அரசுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடாக் கொள்கையின்படி செயற்படுகின்றது.
G – ஐரோப்பிய ஒன்றியத்தோடு இணைந்த ஓர் அமைப்பாகும்.
H – சமூக - பொருளாதாரப் பரப்புகளில் உறுப்பினர்கள் மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதைப் பிரதான அக்கறையாகக் கொண்டது.
I – செயலாளர் நாயகத்துக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்ட பிரதான சட்டத்துறைப் பகுதி பாதுகாப்புச் சபையாகும்.
J – 1945 இல் தாபிக்கப்பட்டது.

**47.** ஐக்கிய நாடுகள் தாபனத்துக்குப் பொருந்துகின்ற சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) ADFJ (2) BEGH (3) CHIJ (4) ADFH (5) AFGH

**48.** பொதுநலவாய அமைப்புக்குப் பொருந்துகின்ற சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) ABCD (2) BCEH (3) DEFG (4) GHIJ (5) DFGH

● கீழ் தரப்பட்டுள்ள சில கூற்றுகள் சர்வதேச நீதிமன்றோடும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்தோடும் (SAARC) தொடர்பானவையாகும். அக்கூற்றுகளின் அடிப்படையில் **49**ஆம் **50**ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சட்டக் கரமாகும்.
B – வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்ட ஒரு பிராந்திய நிறுவனமாகும்.
C – உறுப்பு நாடுகளுக்கு மத்தியிலான சட்டரீதியான பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.
D – எட்டு தென்னாசிய நாடுகளைக் கொண்டுள்ளது.
E – 1985 டாக்கா பிரகடனத்தின்படி தாபிக்கப்பட்டது.
F – ஐக்கிய நாடுகள் தாபனத்துக்கும் அதன் துணை நிறுவனங்களுக்கும் மதியுரைகளை வழங்குகின்றது.
G – பாதுகாப்புச் சபையுடன் இணைந்து பொதுச் சபையால் நியமிக்கப்படும் ஒன்பது நீதியரசர்களைக் கொண்டுள்ளது.
H – கருத்து முரண்பாட்டுக்குட்படாததும் அரசியல் சாராததுமான பரப்புகளில் உறுப்பரசுகளுக்கு மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்தல் அக்கறைக்குரிய பிரதான விடயமாகும்.
I – போர்க் குற்றவாளிகளுக்குக் கொலைத் தண்டனை வழங்குவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.
J – இந்தியா ஒழுங்கமைப்பின் தலைவராக உறுப்பு அரசுகளால் நியமிக்கப்பட்டுள்ளது.

**49.** சர்வதேச நீதிமன்றுக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) ACEF (2) ABDF (3) BEGH (4) ACFG (5) EHIJ

**50.** பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்துக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) AFIJ (2) BDEJ (3) CFGI (4) DHIJ (5) BDEH

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

| | | | |
|---|---|---|---|
| දේශපාලන විද්‍යාව II<br>அரசியல் விஞ்ஞானம் II<br>Political Science II | 23 T II | 19574 | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

சுட்டெண்: ..................................

| பகுதி A | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | 20 |

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாப்பத்திரம் **A, B, C** என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **A** ஆனது **20** குறு வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் **01** புள்ளியும் அரைகுறை விடைக்கு **1/2** புள்ளியும் வழங்கப்படும். **சகல** வினாக்களுக்குமான குறு விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனைப் பகுதி **B, C** ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **B** யிலிருந்தும் **C** யிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

**1.** அரசியல் விளையாட்டை ஆடுவதற்கு **இரு** வழிகளுண்டு. அவ் **இரு** வழிகளையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................

(2) ..............................................................................

**2.** கிரேக்க நகர அரசுகளில் நேரடி சனநாயகம் **இரு** காரணங்களினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ் **இரு** காரணங்களையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................

(2) ..............................................................................

**3.** **இரு** கிரேக்க அரசியல் தத்துவஞானிகள் அரசியல் விஞ்ஞானம் ஒரு கற்கைத்துறையாக உருப்பெறவும் அபிவிருத்தியடையவும் பெரும் பங்காற்றியுள்ளனர். அவ் **இரு** அரசியல் தத்துவஞானிகளையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................

(2) ..............................................................................

**4.** (1) பொதுச் சித்தம் மற்றும் (2) சட்டத்தின் ஆட்சி ஆகிய இரு எண்ணக்கருக்களையும் முறையாக முன்வைத்த **இரு** அரசியல் சிந்தனையாளர்களையும் முறையே குறிப்பிடுக.

(1) ..............................................................................

(2) ..............................................................................

**5.** (i) "மக்களினால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களின் ஆட்சியே சனநாயகமாகும்."

(ii) "தற்கால அரசுகளின் நிறைவேற்றுத்துறை முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களை முகாமைப்படுத்தும் ஒரு குழுவேயன்றி வேறொன்றுமல்ல."

நவீன அரசுகளின் அரசாங்கம் தொடர்பான மேற்குறிப்பிட்ட இரு கூற்றுகளையும் முன்வைத்த **இரு** அரசியல் சிந்தனையாளர்களையும் முறையே குறிப்பிடுக.

(1) ..............................................................................

(2) ..............................................................................



Department of Examinations, Sri Lanka

**6.** (i) "நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாகும்."

(ii) "நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு மிக நெருங்கியதாக இருப்பதோடு அதன் காரணமாக அவ்விரு நிறுவனங்களும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன."

மேற்குறிப்பிட்ட நிறைவேற்று - சட்டத்துறைத் தொடர்புகளைக் காணக்கூடிய **இரு** அரசாங்க முறைகளையும் முறையே குறிப்பிடுக.

(1) ..........

(2) ..........

**7.** (i) "அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் பிரதான நோக்கமாகும்."

(ii) "அரசியல் அதிகாரத்தைக் கையாளுபவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதனூடாகத் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதே பிரதான கரிசனையாகும்."

மேற்குறிப்பிட்ட இரு கூற்றுகளுக்கும் பொருந்தும் **இரு** வகை ஒழுங்கமைப்புகளையும் முறையே குறிப்பிடுக.

(1) ..........

(2) ..........

**8.** (i) ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக் காலமும் ஓர் ஆள் அப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படக்கூடிய தவணைகளின் எண்ணிக்கையும் யாவை ?

(ii) பிரான்சிய ஜனாதிபதியின் பதவிக்காலமும் ஓர் ஆள் அப்பதவியை வகிக்கக்கூடிய தவணைகளின் எண்ணிக்கையும் யாவை ?

(1) ..........

(2) ..........

**9.** (i) பிரித்தானிய அரசாங்கத்தின் அரசியல் நிர்வாகத்தினைப் பெயரிடுக.

(ii) பிரித்தானிய நீதித்துறை முறைமையில் அதி உயர் நீதிமன்றத்தினைப் பெயரிடுக.

(1) ..........

(2) ..........

**10.** (i) சுவிற்சர்லாந்தின் சமஷ்டிப் பேரவையின் (Federal Council) அமைவுச் சேர்க்கையும் அப் பேரவையின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் விதமும் யாது ?

(ii) இந்தியாவில் இராஜ்ய சபா என்றழைக்கப்படும் மத்திய அரசாங்கத்தின் இரண்டாம் மன்றம் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவ் **இரு** வகையான உறுப்பினர்களையும் குறிப்பிடுக.

(1) ..........

(2) ..........

**11.** பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சியின் கீழ் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகம் செய்ததும் அம்முறையை இல்லாதொழித்ததுமான **இரு** யாப்புச் சீர்திருத்தங்களையும் முறையே குறிப்பிடுக.

(1) ..........

(2) ..........

**12.** இலங்கை அரசியல் சீர்திருத்த வரலாற்றில் எந்த **இரு** யாப்புச் சீர்திருத்தங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையும் சர்வஜன வாக்குரிமையும் அறிமுகம் செய்யப்பட்டது என்பதை முறையே குறிப்பிடுக.

(1) ..........

(2) ..........

**13.** (i) பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கான இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு இலங்கையர்களால் தாபிக்கப்பட்ட முதலாவது தேசிய ஒழுங்கமைப்பு யாது ?

(ii) இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியைக் குறிப்பிட்டு, அது தாபிக்கப்பட்ட ஆண்டினைக் குறிப்பிடுக.

(1) ..........

(2) ..........

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

14. (i) டொனமூர் யாப்பின் கீழமைந்த மந்திரிமார் சபையின் உறுப்பினர் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

(ii) டொனமூர் அரசாங்கத்தில் மந்திரிமார்களை நியமிப்பதற்கு அதிகாரம் பெற்றிருந்தவர் யார் ?

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

15. (i) 1948 சோல்பரி யாப்பின் கீழ் மகா இராணியாரின் இலங்கைப் பிரதிநிதியின் உத்தியோகப் பெயர் யாது ?

(ii) 1948 சோல்பரி யாப்பின் கீழ் மகா இராணியாரின் இலங்கைப் பிரதிநிதியை நியமித்த வழிமுறை யாது ?

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

16. (i) 1972 யாப்பின் கீழ் நாம நிருவாகி நியமிக்கப்பட்ட விதம் யாது ?

(ii) 1972 யாப்பின் கீழ் நாம நிருவாகியின் பதவிக்காலம் யாது ?

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

17. (i) 1978 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் நிர்வாகம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ் இரு பகுதிகளையும் குறிப்பிடுக.

(ii) 1978 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் நிர்வாகத்தின் ஒரு பகுதியை பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவியகற்ற முடியும். அப்பகுதியைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

18. (i) இலங்கையில் மாகாண சபைகள் எந்த யாப்புத் திருத்தத்தின் கீழ், எந்த ஆண்டில் தாபிக்கப்பட்டன ?

(ii) மாகாண சபைகளின் பிரதம நிறைவேற்றுப் பதவியைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

19. (1) ஐக்கிய தேசியக் கட்சியும் (2) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் அமைக்கப்படும்போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதாரக் கருத்தியல்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

20. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் (1) பிரதம நிறைவேற்று அதிகாரியையும் (2) பிரதான கலந்துரையாடல் மன்றினையும் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

* *

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

**அறிவுறுத்தல்கள்:**

※ **B** மற்றும் **C** பகுதிகளிலிருந்து **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி B

**1.** பிரயோக அரசியலிலிருந்து கோட்பாட்டு அரசியலை நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர் ? (20 புள்ளிகள்)

**2.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பரிசீலிக்குக.
(i) வலு வேறாக்கம் பற்றிய கோட்பாடும் நடைமுறையும்
(ii) சட்டத்தின் ஆட்சி
(iii) யாப்புறுவாதம்
(iv) நீதிப் புனராய்வு அதிகாரம்
(10 × 2 = 20 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி ஆராய்க.
(i) ஒரு சனநாயக அரசியல் முறைமையில் அரசியல் கட்சிகளின் பணிகள்
(ii) அமுக்கக் குழுக்களின் பணிகள்
(iii) பொதுசன அபிப்பிராயத்தின் வகிபங்கு
(iv) அரசியல் சமுதாயப்படுத்தலின் முகவர்கள்
(v) ஜனநாயக அரசியல் முறைமையில் சிவில் சமூகத்தின் வகிபங்கு
(10 × 2 = 20 புள்ளிகள்)

**4.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி பரிசீலிக்குக.
(i) பிரித்தானிய அரசாங்கத்தில் பொது மக்கள் சபையின் **அல்லது** அமெரிக்க அரசாங்கத்தில் மக்கள் பிரதிநிதிகள் சபையின் வகிபங்கு
(ii) பிரான்சில் ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்குமிடையிலான தொடர்புகள் **அல்லது** சுவிற்சர்லாந்தில் சமஷ்டிப் பேரவைக்கும் (Federal Council) சமஷ்டி மன்றுக்குமிடையிலான (Federal Assembly) தொடர்புகள்
(iii) இந்திய சமஷ்டி முறைமையில் மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான தொடர்புகள்
(iv) சர்வதேச அரசியலின் செயற்பாட்டாளர்களும் அவற்றின் வகிபங்கும் **அல்லது** பொதுக் கொள்கை உருவாக்கச் செயன்முறை
(10 × 2 = 20 புள்ளிகள்)

## பகுதி C

**5.** சுதந்திர இயக்கத்தில் இலங்கைத் தேசிய காங்கிரசின் வகிபங்கினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பரிசீலிக்குக.
(i) டொனமூர் அரசாங்கத்தின் கீழ் நிறைவேற்றுக் குழு முறைமையின் செயற்பாடு
(ii) சோல்பரி யாப்பின் கீழ் சிறுபான்மையினருக்காக வழங்கப்பட்டிருந்த காப்பீடுகள்
(iii) 1972 யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அம்சங்கள்
(iv) 19ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் சனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட மாற்றங்கள்
(10 × 2 = 20 புள்ளிகள்)



Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பரிசீலிக்குக.

(i) இலங்கையின் அரசியல் கட்சி முறைமையில் தென்படும் அண்மைக்காலப் போக்குகள்

(ii) 1978 யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட பிரதிநிதித்துவ முறைமையின் நிறைகளும் குறைகளும்

(iii) 1978 யாப்பின் கீழ் நீதி முன்புனராய்வு அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான உயர் நீதிமன்றின் வகிபங்கு

(iv) இலங்கையில் மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையிலான தொடர்பு

(v) இலங்கையில் உள்ளூராட்சி முறைமையின் பிரதான பண்புகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி ஆராய்க.

(i) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை

(ii) சர்வதேச நீதிமன்றம்

(iii) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அதிகாரங்களும் பணிகளும்

(iv) பொதுநலவாய அமைப்பு (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka